பதவிகள் - வெற்றிடம்

நீதிச்சேவை ஆணைக்குழு

வக்குப் நியாய சபைக்கான தலைவர் மற்றும் அங்கத்தவர்களை நியமித்தல் - 2026

1982 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1956 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க முஸ்லிம் பள்ளிவாசல்கள், தர்ம நம்பிக்கைப் பொறுப்புக்கள் அல்லது வக்குப் சட்டத்தின் கீழ் வக்குப் நியாய சபைக்கான தலைவர் மற்றும் அங்கத்தவர்களை நியமனம் செய்வதற்காக நீதிச்சேவை ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசைகளான முஸ்லிம்களாக இருத்தல் வேண்டும்.

03. கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய, விண்ணப்பங்கள் 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் என்னை வந்தடையுமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வக்குப் நியாயசபை" எனக் குறிப்பிடல் வேண்டும். ஆவணங்களின் மூலப் பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பலாகாது.

04. பின்வரும் ஆவணங்கள் எவற்றையேனும் அல்லது எல்லாவற்றையும் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுமிடத்து அவ்வாறு சமர்ப்பிக்கத் தயாராய் இருத்தல் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்;
(ஆ) ஆகக்கூடிய கல்வித் தகைமைச் சான்றிதழ்;
(இ) உயர் தொழிற் தகைமை சான்றிதழ்;
(ஈ) சிங்களத்தில்/ தமிழில்/ ஆங்கிலத்தில் சித்தி எய்திய ஆகக்கூடிய பரீட்சை சான்றிதழ்.

05. அரசாங்க/கூட்டுத்தாபன சேவையில் உள்ளவர்கள் அவர்களது விண்ணப்பங்களை தங்களது திணைக்கள/ கூட்டுத்தாபனத் தலைவர் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

06. விண்ணப்பங்களும் அது தொடர்பான வேறேதேனும் கடிதத் தொடர்புகளும் நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு முகவரியிடப்படல் வேண்டும்.

ஆனந்தி கனகரத்தினம்,
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
த. பெ. இல. 573,
கொழும்பு 12,
2026, மே 29.